# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2273/10 - 2022 මාර්තු මස 28 වැනි සඳුදා - 2022.03.28

*2273/10 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் திரப்பனை பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

திரப்பனை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்,

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66 அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், திரப்பனை பிரதேச சபையில் இலக்கம் 10 - முரியாகடவல வட்டாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட யூசுப் மொஹமட் தௌபிக் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான திரப்பனை பிரதேச சபையின் இலக்கம் 10 - முரியாகடவல வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக டிக்கிரி பண்டார வனசிங்க என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்,

திரப்பனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கெங்காதரன் முகுந்தன் ஆகிய நான் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு டிக்கிரி பண்டார வனசிங்க என்பவர் திரப்பனை பிரதேச சபையின் இலக்கம் 10 - முரியாகடவல வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கெ. முகுந்தன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
திரப்பனை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
அநுராதபுரம்,
*2022 மாச்சு 28.*

EOG *03 - 1020*